@புத்தகம் தகவல் களஞ்சியம்:

**ஒரு ஏக்கர் பரப்பில் நாட்டு முருங்கை சாகுபடி செய்ய மரியராஜ் சொல்லும் தகவல்கள் இங்கே!!!**

நிலத்தை முதலில் சட்டிக்கலப்பையால் ஒரு சால் உழவு செய்து, 15 நாள் காயவிட வேண்டும். பிறகு டிரில்லரால் ஒரு உழவு செய்து அடுத்த நாள் செடிக்கு செடி20அடி இடைவெளியில், ஓர் அடி ஆழத்தில் குழி எடுக்க வேண்டும்.ஏக்கருக்கு 100 குழிகள் வரை எடுக்கலாம்.முருங்கையை போத்தாக நடவு செய்தால் விரைவாக மகசூலுக்கு வரும்.

நன்றாக வளர்ந்த முருங்கை மரத்தில் இருந்து, ஒன்றரை அடி உயரத்தில் போத்துகளை வெட்டி வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தில் 100 லிட்டர் தண்ணீர் 3 லிட்டர் பஞ்சகவ்யா கலந்து கொள்ள வேண்டும். போத்துகளில், எந்த முனையை மண்ணுக்குள் நடவு செய்யபோகிறோமோ, அதை அரை அடி அளவுக்கு பஞ்சகவ்யா கரைசலில் நனைத்து எடுத்து பத்து நிமிடம் நிழலில் வைத்து பிறகு, குழிக்குள் நடவு செய்ய வேண்டும். இதனால் வேர் வளர்ச்சி தடைபடாமலும், வேர்ப்பகுதி

அழுகாமலும் இருக்கும். நடவுக் குழிக்குள் அரை கிலோ அளவு மட்கிய சாணத்தைப் போட்டு அதில் போத்து பாதியளவு குழிக்குள் மூழ்குமாறு நடவு செய்து மண் அணைத்து முதல் நீர் விட வேண்டும். பின் மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து தண்ணீர் பாய்ச்சி வந்தால் போதும்.

நடவு செய்த அடுத்த நாள் பசுஞ்சாணத்தை மருதாணி வைப்பது போல் போத்துக்களின் நுனியில் ஒரு இஞ்ச் அளவுக்கு சுற்றிலும் வைக்க வேண்டும். 10 முதல் 15-ம் நாளில் தளிர் தெரியும். 30-ம் நாளில் 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மில்லி பஞ்சகவ்யா என்ற கணக்கில் கலந்து தெளிக்க வேண்டும். பிறகு ஒவ்வொரு 15 நாள் இடைவெளியிலும் இதே அளவில் பஞ்சகவ்யாவை தெளிக்க வேண்டும்.

## பூக்கும் நேரத்தில் பிண்ணாக்கு கரைசல்!

6-ம் மாதத்தில் பூ பூக்க ஆரம்பிக்கும்.அந்த நேரத்தில் பாசிப்பயறு 5 கிலோ,தட்டைப்பயறு 5 கிலோ, கொள்ளுப்பய று5 கிலோ, கொண்டைக்கடலை ஆகியவற்றை மாவாக திரித்து இதனுடன் கடலைப்

பிண்ணாக்கு 80 கிலோ, வேப்பம் பிண்ணாக்கு 10 கிலோ ஆகியவற்றை 200லிட்டர் கொள்ளளவுள்ள டிரம்மில் போட்டு தண்ணீர் ஊற்றி நன்றாக கலக்கிவிட்டு டிரம் நிரம்பும் அளவுக்கு தண்ணீர் ஊற்ற வேண்டும் இதை இரண்டு நாள் வரை வைத்திருந்து, ஒரு குழிக்கு 2லிட்டர் அளவு தூரில் ஊற்றி மண் அணைக்க வேண்டும். இதனால் பூ உதிராமல் காய் பிடித்து நன்கு வளரும்.

கம்பளிப் பூச்சி தாக்குதலுக்கு வசம்புபொடி கரைசல்!

குளிர் காலத்தில் கம்பளிப்பூச்சி தாக்குதல் இருக்கும். அந்த நேரத்தில் 10லிட்டர் தண்ணீரில் 100 மில்லி வேப்ப எண்ணெய், 200 கிராம் வசம்புப் பொடி கலந்து கைத்தெளிப்பானால் தெளிக்க வேண்டும். வருடம் ஒருமுறை மழை நேரத்தில், மரத்தில் இருப்பதிலேயே உயரமான கம்பை வெட்ட வேண்டும்.அதில் கட்டை காய்கள்தான் வரும்.காய்கள் உச்சிக்குப் போனால் பறிக்க முடியாது. தவிர அதிக காற்று வீசும்போது மரம் முறிய வாய்ப்பு உள்ளது. எனவே,உயரமான கிளைகளை கவாத்து செய்ய வேண்டும். இதனால், கிளைகள் வளர்ந்து அதிக பூ பூத்து காய்பிடிக்கும். நல்ல முறையில் பராமரித்தால் 8 ஆண்டுகள் வரை கூட நல்ல மகசூல்

பார்க்கலாம்...

நன்றி, மரியராஜ்

தொடர்புக்கு : 8904256076

தன்மை

CONTENTSபூ உயிரியல்பூ மலருதல்மகரந்தச்சேர்க்கைமுருங்கையில் பூ உயிரியல் பற்றிய ஆராய்ச்சிமுருங்கையில் பூவினர் தனிமைகள்

பூ உயிரியல்

முருங்கை பூக்கள் வெள்ளை நிறத்தில் மணமுடையதாகவும் பூக்காம்புகள் நீளமாகவும் படர்ந்தும் காணப்படும். பூவிலைக் காம்புகள் ஐந்து இருக்கும். அவை மடங்கியும் கூர்மையுடையதாகவும் வெளிப்புறத்தில் குழல் போன்று வளைந்தும் காணப்படும். பூ மடல்கள் ஐந்து காணப்படும்

அவை தனியே குறுகி மடல் போன்று காணப்படும்.

மகரந்தத்தாள் மஞ்சள் நிறத்தில் ஐந்து காணப்படும். மகரந்தக்காம்புகள் நீண்டு காணப்படும். கருவறைகள் மூன்று காணப்படும். காய்கள் 30 முதல் 120 செ.மீ நீளமுடையதாகும். முக்கோண வடிவில் நீண்டு 13 முதல் 22 விதைகள் உடையதாக காணப்படும்.

பூ மலருதல்

முருங்கையில் அதிகாலை 4.30 முதல் 6.30 வரை பூக்கள் மலரும். மிக முக்கியமாக 530 மணிக்கு அதிகப்படியான வளர்ச்சி இருக்கும். பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லு ாரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டதில் பூ மலரும் நேரம் அதிகாலை 5.00 மணி முதல் 9.00 மணிவரை என்றும், 27.3° செ - 29.3°செ. மற்றும் காற்றின் ஈரப்பதம் 68 முதல் 78 சதவீதம் பூ மலர்ச்சிக்கு பெரிதும் துணை செய்கிறது என்றும் கண்டறிந்துள்ளனர். மகரந்தத் தாளில் மிகவும் நீளமான மகரந்தத்தாள் முதலில் மலர்கிறது. மகரந்தத்து ாள் முதிர்ச்சியடைந்த நிலையில் பச்சை கலந்த மஞ்சள் நிறத்தில்

இருக்கும்.

மலர்ந்த நிலையில் மகரந்தத்துாள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். ஒரு மகரந்தத்தாளில் சுமார் 7,400 மகரந்தத்துாள்கள் இருக்கும். பூ மலர்வதற்கு ஒருநாள் முன்பும், மலர்ந்த நாள் அன்றும் ஏற்புத்தன்மை உடையதாய் இருக்கும்.

அதனால் அயல்மகரந்தச்சேர்க்கை தேனி"க்கள் மற்றும் ஈக்களினால் நடைபெறுகிறது. சுமார் 72 சதவீதம் மகரந்தம் உயிருடன் இருக்கும்

. இதன் குரோமோசோம் எண்ணிக்கை 28 ஆகும்.

மகரந்தச்சேர்க்கை

முருங்கையில் பெரும்பாலும் அயல்மகரந்தச்சேர்க்கையே நடைபெறுகிறது. ஈக்கள், பூச்சிகள், கொசு அயல்மகரந்தச்சேர்க்கைக்கு பெரிதும் துணைபுரிகின்றன. பூ மலர்வதற்கு முதல் நாள் பூவிலுள்ள மகரந்தத் தாளினை

நீக்கம் செய்யவேண்டும். பின்னர் மறுநாள் காலையில் 11 மணிக்கு முன்னர் ஆண் மரத்திலிருந்து மகரந்தத்தை சேகரித்து, மகரந்தத்தாள் நீக்கிய பெண் தாவரத்தின் பூவில் மகரந்தச்சேர்க்கை செய்யவேண்டும். பின்னர் பை கொண்டு மகரந்தச் சேர்க்கை நடைபெற்ற மலரினை மூடிவிட வேண்டும். 4-5 நாட்கள் கழித்து பூவிலிருந்து பிஞ்சு வெளிவந்தவுடன் பையினை நீக்கி அட்டையினால் அடையாளம் இடவேண்டும். மேற்கூறிய முறையில் அதிக எண்ணிக்கையில் வீரிய ஒட்டு காய்களை உருவாக்கலாம்.

பொதுவாக முருங்கையில் ஜனவரி முதல் ஏப்ரல் மாதத்தில் பூக்கள் தோன்றும். அதிகப்படியான பூக்கள் பிப்ரவரி மாதத்தில் தோன்றும். பூக்கள் வெண்மை நிறத்தில் இருக்கும். பூவிதழ்கள் ஒரே மாதிரியான உயரத்தில் இருக்கும். பூவிலிருந்து ஒரு வித வாசனை உண்டாகும். காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரை பூக்கள் மலரும் அதன்பின்னர் மகரந்தத்தாள் வெடிக்கும் மற்றும் தேன் சுரப்பது ஆரம்பிக்கும். வெடித்த மகரந்தத்தாளிலிருந்து கொத்து கொத்தாக மகரந்தத்துாள்கள் வெளியேறும் இவை பூச்சிகளினால் கவரப்பட்டு மகரந்தச்சேர்க்கை நடைபெறுகிறது. பூச்சிகளில் சைலோகோப்பா என்கின்ற பூச்சியின் கால்களில் மகரந்தத் துாள் அதிகளவில் ஒட்டிக்கொண்டு மகரந்தச்சேர்க்கை நடைபெறுகிறது. இவை

தவிர தட்டுப்பூச்சி ஒரு வித எறும்புகள் மற்றும் லெப்பிடாப்டிரா வகையை சார்ந்த பூச்சிகளும் மகரந்தச்சேர்க்கைக்கு பெரிதும் உதவுகின்றன. பூ மலரும் தருணத்தில் மகரந்தத்தாள் உயரத்திலேயே இருக்கும் ஆனால் பின்னர் சிறிது சிறிதாக வளர்ந்து மகரந்தத்தாளை விட அதிக உயரத்தில் காணப்படும். பூ விரிந்து ஒரு சில மணி நேரங்களிலேயே இவ்வளர்ச்சி காணப்படுவதால் மகரந்தச்சேர்க்கைக்கு அந்நிய காரணிகளில் தேவை முருங்கை மரத்திற்கு காணப்படுகிறது.

## முருங்கையில் பூ உயிரியல் பற்றிய ஆராய்ச்சி

கால்டாஸ் (2000) என்ற அறிஞர் முருங்கையில் மகரந்தச்சேர்க்கைக்கும் அதன் மூலம் காய் உற்பத்திக்கும் வெளிப்புற காரணிகளான பூச்சிகள் மற்றும் காற்று போன்றவை மிக அவசியம் என்று கணடறிந்துள்ளார். விசாகப்பட்டினத்தில் முருங்கையில் இரண்டு பருவங்களில் பூ மலர்ச்சி உண்டாகிறது என்று ஜோதி மற்றும் குழுவினர் (1990) கண்டறிந்துள்ளனர். அவை முறையே பிப்ரவரி முதல் மே மாதம் முடிய மற்றும் செப்டம்பர் மாதம் முதல் நவம்பர் மாதம் முடிய என்றும் கார்பெண்டர் ஈக்கள் மகரந்தச்சேர்க்கைக்கு பெரிதும் உதவி செய்கின்றன என்றும் கணிடறிந்துள்ளனர். பாபு மற்றும் ராஜன் என்பவர்கள் (1996)

முருங்கை மரத்தில் பூக்கும் பருவம் மகரந்தத்தின் தன்மைகள் பற்றி ஆகஸ்ட் 1995 முதல் ஜனவரி 1996 வரை ஆராய்ச்சி செய்து முடிவுகளை வெளியிட்டுள்ளனர். அதன்படி முருங்கை மரம் ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரை முதலில் பூக்கிறது பின்னர் டிசம்பர் முதல் ஜனவரி வரை பூக்கிறது. பூக்களில் மகரந்தத்துாள்கள் முதலில் முதிர்ச்சியடைகின்றன பின்னர் பூ மலர்ச்சி நடைபெறுகிறது. பூக்கள் 14.30 முதல் 9.00 மணி முடிய மலர்கின்றன ஆகஸ்ட் முதல் செப்டம்பர் மாதம் வரை பூக்கும் பூக்களில் மகரந்தத்தாள் அதிகம் வெடிப்பதில்லை ஏனெனில் குளிர் அதிகம் நிலவுவதால் மகரந்தத்தாளில் ஈரத்தன்மை காணப்படுகிறது. இதனால் மகரந்தச்சேர்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆனால் கருப்பு எறும்புகள் மற்றும் வணிடுகள் மகரந்தச்சேர்க்கைக்கு உதவி செய்கின்றன.

முருங்கையில் பூவினர் தனிமைகள்

பூவின் தன்மைகள்

கணக்கெடுப்பு

**பூக்கும் பருவம்**

**ஜனவரி முதல் ஏப்ரல் வரை**

**பூவின் வகை**

**ஒழுங்கற்றது**

**பூவின் நிறம்**

**வெள்ளை நிறத்தில் அடிப்பகுதி பச்சை நிறத்துடன் காணப்படும்**

**பூவின் மணம்**

**உண்டு**

**தேனி சுரப்பு**

உண்டு

பூமலரும் நேரம்

காலை 6.00 மணி முதல் 12.00 மணி வரை

மகரந்தத்தாள் வெடிக்கும் நேரம்

700 மணி முதல் 13.00 மணி வரை

ஒரு பூவிலுள்ள மகரந்ததத்தாளின்  எண்ணிக்கை

5

ஒரு மகரந்தத்தாளிலுள்ள

மகரந்தத்துகள்களின் எண்ணிக்கை

4705

ஒரு பூவிலுள்ள மகரந்தத்துகள்களின் எண்ணிக்கை

23525

ஒரு துகளிலுள்ள தூள்களின் எண்ணிக்கை

523

மகரந்தத்து◌ாளின் வகை

மூன்று

மகரந்தத்துாளின் வடிவம்

வட்ட வடிவம்

மகரந்தத்துாளின் அளவு

- 47.25 x 41.28

துகளின் வகை

ஈரமுடையது

மலர்ந்த பூவில் இயற்கையில் காய் பிடிப்பு சதவீதம்

1028

வலையில் உள்ள மரங்களில் காய் பிடிப்பு சதவீதம்

1

பையினுள் காய் பிடிப்பு சதவீதம்

இல்லை

முருங்கையில் மகரந்தச் சேர்க்கை காரணிகள்

வந்து செல்லும் பூச்சியின் பெயர்

வருகை நேரம்

உணவின் தன்மை

தைசனாப்திரா

கேப்ளோதிரிப்ஸ் சைலோனிக்கஸ்

பகல் மற்றும் இரவு

மகரந்தம் மற்றும் தேன்

தைசனாப்திரா

மைக்ரோ செபாலோதிரிப்ஸ் அப்டோமினாலிஸ்

பகல் மற்றும் இரவு

மகரந்தம் மற்றும் தேன்

க

ைம்னோப்டிரா

சைலோகோப்பா

பகல்

மகரந்தம் மற்றும் தேன்

ஏப்பிஸ்

பகல்

மகரந்தம் மற்றும் தேன்

வெஸ்பா

பகல்

மகரந்தம் மற்றும் தேன்

லெப்பிடாப்டிரா பாப்பிலினோடே

பகல்

தேன்

கோலியோப்டிரா

பகல்

தேன்

ஆதாரம் : தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

சாகுபடி வகைகள்

CONTENTSமுருங்கையில் ஊடுபயிர் சாகுபடிஇடைவெளியில் பயிர் சாகுபடிமுருங்கை பயிரிடும் முறைகள்நிலத்தில் நேரடி விதைப்புகுறைந்த அளவு உற்பத்திக்குவேளாண் - வனவியல்கேள்வி பதில்கள்

சிறந்த பயிரிடும் முறை என்பது

இயற்கை வளங்களை சிறப்பாக பயன்படுத்துதல்நிலைத்த, நீடித்த வருமானத்தை பெறுதல்சுற்றுப்புற சூழ்நிலைகளை

பாதிக்காமல் இருத்தல் போன்றவையாகும்.

பொதுவாக பயிர் சாகுபடி முறை என்பது பின்வருமாறு இருக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் அதிக உற்பத்தி தரக்கூடியதாகவும், இயற்கை வளங்களை சிறப்பாக பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.எந்தவொரு தட்பவெப்ப சூழ்நிலையிலும், பூச்சிநோய் தாக்குதல் இல்லாமல் நிலையான உற்பத்தியை தரக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாக இருத்தல் வேணடும்.நிலத்தின் வளங்களை சமஅளவில் பிரித்து வருமானத்தை அதிகப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

முருங்கையில் ஊடுபயிர் சாகுபடி

முருங்கை ஒரு வறட்சியை தாங்கி வளரக் கூடிய பயிராதலால், மிகக் குறைந்த நீரே பயிர் வளர்ச்சிக்கு தேவைப்படுகிறது. பொதுவாக மணற்பாங்கான மற்றும் செம்புரை மண் இதற்கு உகந்தது. முருங்கையில்

ஊடுபயிராக சாகுபடி செய்யக்கூடிய பயிர்களை தெரிவு செய்யும் பொழுது அவற்றிற்கு அதிக நீர்தேவை இல்லாத மாதிரியும், விரைவில் வளரக்கூடிய பயிராகவும் தெரிந்தெடுக்க வேண்டும்.

முருங்கையில் பாகல், புடலை, பீர்க்கு, கொடிவகை, பீன்ஸ் போன்றவற்றை ஊடுபயிராக பயிரிட்டால் முருங்கை மரம் து◌ாணாக பயன்படுகிறது. முருங்கையில் ஊடுபயிராக நிழலை தாங்கி வளரக்கூடிய காய்கறிகளை பயிரிடலாம். செடிமுருங்கை பொதுவாக தனியாகவே சாகுபடி செய்யப்படுகிறது. முருங்கையில் ஆணிவேர் அதிகமாகவும், சல்லிவேர் குறைவாகவும் காணப்படுவதால் ஊடுபயிருடன் சத்துக்களுக்கு போட்டியிடுவதில்லை. மிகவும் வளம் குறைந்த மண்ணிலும் பயிரிட முருங்கை மரம் உகந்தது.

தென்னிந்தியாவில் முருங்கையில் வெவ்வேறு பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்கிறார்கள். முருங்கையை மா, தென்னையில் ஊடுபயிராக சாகுபடி செய்கின்றனர். பெங்களூருவில் உள்ள இந்திய தோட்டக்கலை ஆராய்சசி இயக்ககத்தில் பல்வேறு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில் முருங்கையில் காய்கறிப்

பயிர்களான வெங்காயம், மிளகாய், கொத்தவரை போன்றவற்றினை பயிரிடலாம்

தமிழ்நாட்டில் முருங்கையை நிலத்தினை சுற்றி பயிரிடுகின்றனர், மிளகாய் மற்றும் கத்தரி வயல்களில் கலப்புப் பயிராகவும் சாகுபடி செய்கின்றனர் (காதர் முகைதீன் மற்றும் சண்முகவேலு, 1982) /150 முதல் 200 அடி உயரமுடைய முருங்கை மரம் சுமார் 6 முதல் 10 கிலோ வரை காய்க்கும்.

முருங்கையை மக்காச்சோளம் மற்றும் சூரியகாந்தி பயிரில் ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். இதனால் களை வளர்ச்சி கட்டுப்படுத்தப்படுகிறது.

விவசாயிகள் கீழ்க்கண்ட காய்கறிப் பயிர்களை சாகுபடி செய்வதற்கு பரிந்துரை செய்கின்றனர். தக்காளி, மிளகாய், பீன்ஸ், கறிவேப்பிலை, கொடி வகை காய்கறிப் பயிர்கள் மற்றும் ஏனைய இலைக் காய்கறிகள். மரம் வளர்ப்பு முறையில் தேக்கு, வேப்பிலை, சுபாபுல் போன்றவற்றினை நிலத்தின் ஒரங்களில் சாகுபடி செய்யலாம்.

## இடைவெளியில் பயிர் சாகுபடி

இம்முறையில் மரங்களை குறுகிய வரிசையில் பயிரிட வேண்டும். இதனால் மரங்களுக்கிடைய நீண்ட இடைவெளி கிடைக்கும். இவற்றில் காய்கறிகளை சாகுபடி செய்யலாம். இவற்றில் நிழலினை தாங்கி வளரக்கூடிய இலைக் காய்கறிகளை பயிரிட வேண்டும். ஏனெனில் இம்முறையில் மரங்கள் உடன் வளரும் தாவரங்களின் வளர்ச்சியை மட்டுப்படுத்துகின்றன. முருங்கை இலைகளில் புரதச்சத்து மிகுந்து காணப்படுவதால் இடைவெளி சாகுபடியில் அதிக இலைகளை உற்பத்தியை செய்யலாம்.

இம்முறையில் சாகுபடி செய்ய முருங்கை மிகவும் உகந்த பயிராகும். இடைவெளி சாகுபடி செய்யும்போது பயிர்களை நன்கு வெட்டி விடவேண்டும்.

## இலை உற்பத்திக்காக நெருக்கிய முறையில் முருங்கையை பயிரிடுதல்

உலகின் வெவ்வேறு நாடுகளில் முருங்கை இலைக்காக பயிரிடப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. ஆப்ரிக்காவில் இது

தீவனப்பயிராக பயன்படுகிறது. நெருக்கிய முறையில் 15 x 15 செ.மீ. இடைவெளியில் சாகுபடி செய்வதினால் மிக அதிக இலை உற்பத்தியாக 43 - 52 டண் / ஒரு எக்டேருக்கு கிடைக்கும்.

## வேளாண்மை பயிர்கள்

முருங்கையில் மக்காச்சோளம், தீவன சோளம், கம்பு, ராகி, பயறு வகைள, எள், கடலை போன்றவற்றினை ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். இம்முறையில் சாகுபடி செய்வதினால் மானாவாரியில் கூட அதிக லாபம் கிடைப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

## பயிர் வேலி

முருங்கையை வேலிப்பயிராக பயிரிட்டால் நிலங்களுக்கு வேலியாகவும் அதிலிருந்து கிடைக்கும் பல்வேறு பொருட்கள் லாபகரமாகவும் விளங்குகிறது

முருங்

## கை பயிரிடும் முறைகள்

முருங்கை மரத்தினை விதையின் மூலமாகவோ அல்லது கடின தண்டு குச்சிகளின் மூலமாகவோ வளர்க்கலாம். விதைகளை நிலத்தில் நேரடி விதைப்பு செய்யலாம் அல்லது நாற்றுக்களை வளர்த்து நடவு செய்யலாம்.நிலத்தில் தண்ணீர் பற்றாக்குறை இல்லாத பட்சத்தில் நேரடி விதைப்பு செய்து நீர்ப்பாய்ச்சலாம். மழைக்காலங்களுக்கு முன்னர் விதைப்பு செய்தால் விதை எளிதில் முளைத்து வருகிறது. நாற்று விட்டு நடவு செய்வதினால் கூலி ஆட்களின் தேவை அதிகமாகிறது ஆனால் நாற்று விட்டு நடுவதினால் நிலத்தில் செடிகளின் வளர்ச்சி ஒரே மாதிரியாக இருக்கும். முருங்கையில் தண்டுக் குச்சிகள் மூலம் பயிர்ப்பெருக்கம் செய்யப்படுகிறது.

## நிலத்தில் நேரடி விதைப்பு

முருங்கைக்கென தயாரிக்கப்பட்ட நிலத்தில் ஒரு குழியில் 5 செ.மீ. ஆழத்தில் இரண்டு அல்லது மூன்று விதைகளை விதைக்க வேண்டும். முதல் ஐந்து நாட்களுக்கு மிகவும்

அதிகப்படியான நீர்ப்பாய்ச்சுதல் தேவையில்லை. அதிகம் நீர் தேங்குவதினால் அழுகல் நோய் ஏற்படும் மேலும் மிகவும் வறண்ட நிலையில் முளைப்புத்திறன் குறைவாக காணப்படும்.

நாற்றாங்கால் நடவுமுறைகள்

நாற்றுக்களை குழித்தட்டுகளிலோ, பாலித்தின் பைகளிலோ நாற்றாங்காலிலோ அல்லது தொட்டிகளிலோ வளர்க்கலாம்.தனித்தனி பாலித்தின் பைகளில் நாற்றுக்களை வளர்ப்பது மிகவும் சிறந்தது. இதனால் நாற்றுக்கள் அதிகம் சேதமடைவதை தவிர்க்கலாம்நாற்றுக்களை நிழல் பகுதிகளில் வளர்க்க வேண்டும்.பாலித்தீன் பை சுமார் 18 செ.மீ. உயரமும் 12 செ.மீ. விட்டமும். உள்ளதாக தெரிவு செய்ய வேண்டும்.பைகளில் 3 சதவீத மண் மற்றும் 1 சதவீத மணல் கலந்த கலவையினால் நிரப்ப வேண்டும்.ஒவ்வொரு பையிலும் இரண்டு அல்லது மூன்று விதைகளை 2 செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும்.விதைத்த 5 முதல் 12 நாட்களில் முளைப்பு ஏற்படும். விதை முளைத்தவுடன் காப்பர் ஆக்ஸி குளோரைடு என்ற மருந்தினால் நனைக்க வேண்டும்.இதனால் அழுகல் நோய் ஏற்படுவதைத் தவிர்க்கலாம் நடுவதற்கு முன் பாலித்தின் பையிலுள்ள

ஏனைய நாற்றுக்களை பிடுங்கி விட வேண்டும்.நாற்று நடுவதற்கு முன் நீர்ப்பாய்ச்சுதலை தவிர்க்க வேண்டும் நாற்றுக்கள் சுமார் 60 முதல் 90 செ.மீ. உயரம் வளர்ந்தவுடன் நிலத்தில் நடலாம்.நாற்றுக்களை நடுதல் நாற்றுக்களை நிலத்தில் நடுவதற்கு முன் குழிகளில் நீர் பாய்ச்ச வேண்டும்.மழை வரும் பருவத்தில் நடவு செய்தால் இன்னும் சிறப்பாக செடிகள் வளர்ச்சியடையும்.அதிகம் மழை பெய்யும் இடங்களில் நாற்று நட்டவுடன் நாற்றுக்களை சுற்றி மேடு அமைப்பதினால் நீர் செடிகளின் அருகில் தேங்குவதைத் தவிர்க்கலாம்.நாற்றுக்கள் சாய்ந்து விடாமல் இருப்பதற்கு 40 செ.மீ. உயர குச்சிகளினால் நாற்றுக்களை கட்டலாம்.

குச்சிகளின் மூலம் வளர்த்தல்

மிகவும் கடினமான குச்சிகளை தெரிவு செய்தால் அவைகள் எளிதில் வளரும்.காய்கள் உற்பத்தி தந்தவுடன் குச்சிகளை தயாரிக்கலாம்.இக்குச்சிகள் புதிய தழைகளை கொடுக்கின்றன. இவை விதை மூலம் வளர்க்கக் கூடிய செடிகளைக் காட்டிலும் விரைவில் வளர்கின்றன.ஆனால் இவற்றில் வேரின் ஆழம் குறைவாகவே காணப்படும்.குச்சிகளின் உயரம் 45 முதல் 180 செ.மீ நீளம்

உடையதாகவும் 4 முதல் 16 செ.மீ. விட்டம் உடையதாகவும் தெரிவு செய்ய வேண்டும்.குச்சிகளை நேரடியாக நிலத்தில் ஊன்றலாம் அல்லது நாற்றாங்காலில் வளர்த்து பின்னர் நடலாம். நடுவதற்கு 3 நாட்களுக்க முன்னர் குச்சிகளை தயாரித்து நிழலில் வைக்க வேண்டும்.

குச்சிகளை நிலத்தில் ஊன்றுதல்

ஒரு மீட்டர் ஆழமும் ஒரு மீட்டர் அகலமும் உடைய குழிகளை நிலத்தில் ஏற்படுத்த வேண்டும்.குச்சிகளை இக்குழிகளில் நடுவதற்கு முன் மண், மணல் மற்றும் எரு கலந்த கலவையினால் குழியை நிரப்பி பின்னர் நடவேண்டும்.குச்சியின் அடிப்பகுதியில் உள்ள மண்ணை நன்கு அமுக்கி விடவேண்டும். இதனால் நீர் வடிதல் சிறப்பாக இருக்கும். மண்ணின் தன்மையைப் பொறுத்து நீர் பாய்ச்ச வேண்டும்குச்சியின் மேல்புறத்தை காப்பர் ஆக்ஸி குளோரைடு மருந்தினால் தடவ வேண்டும். மிக அதிக உற்பத்திக்கு செடிக்கு செடி 3மீட்டர் இடைவெளி விடவேண்டும். மரத்திற்கு இடையில் உள்ள இடைவெளியில் களை வளராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

* தைவானிலுள்ள ஆசியாவின் காய்கறி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையம், முருங்கை நடவிற்கான பரிந்துரைகளை அளித்துள்ளன. அதன்படி பின்வரும் இடைவெளிகளை பின்பற்றலாம்.

காய் உற்பத்திக்கு - 2 மீட்டர் (செடிக்கு செடி) X3 முதல் 5 மீட்டர் (வரிசைக்கு) இலை உற்பத்திக்கு - 60 செ.மீ. (செடிக்கு செடி) X 100 செ.மீ. (வரிசைக்கு) (சாதாரணமாக) இலை உற்பத்தி - 10 முதல் 20 செ.மீ (செடிக்கு செடி) x 30 to 50 செ.மீ. (வரிசைக்கு) (அயர் நடவு)

குறைந்த அளவு உற்பத்திக்கு

நகர் புறங்களில் குறுகிய இடங்களில் அதிகப்படியான முருங்கை இலை உற்பத்திக்கு 0.75 மீட்டர் x 1 மீட்டர் இடைவெளியில் சாகுபடி செய்வது மிகச் சிறந்ததாகும். மிகக் குறுகிய இடைவெளியில் நடவு செய்வது அதிக உற்பத்தியை கொடுத்தாலும் விதைப்பதற்கு அதிக அளவு விதைகள் தேவைப்படும். மேற்கூறிய இடைவெளியல் சாகுபடி செய்யும்

போது கணிசமான அளவு காய் உற்பத்தியும் கிடைக்கும்.

வேளாண் - வனவியல்

முருங்கையை இரண்டு மரங்களின் இடைவெளியில் பயிரிடலாம். இரண்டு மரங்களுக்கும் இடையே கிட்டத்தட்ட 2 முதல் 4 மீட்டர் இடைவெளியும் பின்பு கிழக்கு மேற்காகவும் அமைந்தால் ஊடுபயிர்கள் அதிக அளவு சூரிய ஒளியைப் பெரும்.

அதிக தழைச்சத்து தேவைப்படும் மக்காச்சோளம் மற்றும் மரவள்ளிக்கிழங்கு போன்றவற்றை முருங்கையினுள் ஊடுபயிராக பயிரிடுவதற்கு முன் நிலத்திற்கு அதிக அளவில் சத்துக்களை அளிக்க வேண்டும். சோளம் மற்றும் சிறு தானியங்களை முருங்கையினுள் ஊடுபயிராக சாகுபடி செய்தால் சூரிய ஒளிக்கு போட்டியிடும் வாய்ப்பு உள்ளது. எனவே பயறு வகைப்பயிர்கள் மற்றும் நிலக்கடலையை முருங்கையினுள் ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். விதை உற்பத்திக்கு சற்று அதிக இடைவெளியில் (3 x 3 மீ) விதைக்க வேண்டும். வரிசைக்கு வரிசை மற்றும் செடிக்கு செடி இடைவெளியை ஒரே சீராக அமைப்பதற்காக கயறு மற்றும் அளவு குச்சிகளை பயன்படுத்தி

இடைவெளியை நேராக்க வேண்டும். இதனால் செடி வளர்ந்தவுடன் ஒரே மாதிரியாக இருக்கும்.

**கேள்வி பதில்கள்**

செடி முருங்கையில் உள்ள இரகங்களை கூறவும்?

பிகேஎம்-1 & 2

நான் ஒரு எக்டர் செடிமுருங்கை சாகுபடி செய்ய விரும்புகின்றேன். அதற்கு எவ்வளவு விதை தேவை?

500 கிராம்

எனது முருங்கை பயிரில் அதிக அளவில் கம்பளி புழுக்களில் தாக்குதல் உள்ளது. அதனை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும்?

குளோரிபைரிபாஸ் (அ) குயினால்பாஸ் 2மிலி/லி தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்

ஆதாரம் : தோட்டக்கலைக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

விவசாயம் நாட்டு முருங்கை சாகுபடி DŽ DŽ